## லண்டனில் அரங்கேற்றப்பட்ட

# இசைஞானியின் சிம்பொனி இசை தமிழ்நாட்டுக்கும், தமிழனுக்கும் பெருமை!

## இளையராஜாவுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!



சென்னை, செப்.15 –

**சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில், இசைஞானி இளையராஜா, திரையுலகில் 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை கொண்டாடுகிற விதமாக, தமிழ்நாடு அரசு சார்பில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பாராட்டு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வரவேற்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ``லண்டனில் அரங்கேற்றப்பட்ட இசை ஞானியின் சிம்பொனி இசை, ஒட்டுமொத்த தமிழ் நாட்டுக்கும், தமிழனுக்கும் பெருமை" என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:

இசைத் துறையில், 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பாக நடத்தப்படுகின்ற பிரமாண்ட பாராட்டு விழாவில், வரவேற்புரை ஆற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை, எனக்கு அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு முதலில் எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு எத்தனையோ அடையாளங்கள் இருக்கின்றன. அதில் மிக மிக முக்கியமான அடையாளமாக, யாரும் அழிக்க முடியாத அடையாளமாக திகழும் இசைஞானி இளையராஜா அவர்கள், அவரின் இசையும் இன்றைக்கு நம்முடன் இருக்கின்றன.

### இசைஞானி பட்டம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும், நம் முதலமைச்சர் அவர்கள் மீதும் தணியாத பாசம் கொண்டவர் நம் இசைஞானி அவர்கள். ராஜா சார் அவர்களின் இசைக்கு தானும் ஒரு ரசிகர் என்ற வகையில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் 1988ஆம் ஆண்டில் இசைஞானி என்ற பட்டத்தை, நம் இசைஞானி அவர்களுக்குக் கொடுத்தார். அதுபற்றி, கலைஞர் அவர்கள் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதியிருந்தார். அவர் எழுதியதாவது, 1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு விழாவில், `இசைஞானி' என்ற பட்டத்தை யாரும் சொல்லாமல், முன்கூட்டியே திட்டமிடாமல், என் இதயத்தில் மண்டி கிடந்த அன்பின் காரணமாக இளையராஜா அவர்களுக்கு சூட்டி மகிழ்கிறேன்' என்று கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படிப்பட்ட இசைஞானி இளையராஜா அவர்களுக்கு, இன்றைக்குப் பாராட்டு விழா, எடுத்து நாம் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம்.

### எங்கும் நிறைந்திருக்கும் இசை!

நாம் எல்லோரும் வெவ்வேறு தாயின் வயிற்றில் பிறந்திருந்தாலும், நம் எல்லோரையும் தாலாட்டிக் கொண்டு இருக்கின்ற இசைத்தாய்தான் நம் இளையராஜா அவர்கள். அவரின் பாடல் இல்லாமல் எந்தக் குழந்தைக்கும் தாலாட்டு இல்லை, இளமையில் துள்ளல் இல்லை, அவர் பாடல் இல்லாமல், நம் அத்தனை பேருக்கும் காதல் இல்லை.

வயல்வெளி, டீக்கடை, திருவிழா, திருமணம், ஆட்டோ, பேருந்து இப்படி அனைத்து இடங்களிலும் நிறைந்து இருக்கக்கூடிய ஒரே இசைஞானி நம் இளையராஜா அவர்கள். இசையமைப்பாளர் என்பதையும் தாண்டி, இசை மருத்துவர் என்று சொல்லும் அளவிற்கு, இசைஞானி இளையராஜா அவர்கள்தான் மன அழுத்த நிவாரணி.

### வாழ்க்கைப் பயண வழித்துணை!

சமீபத்தில், சமூக வலைதளத்தில் ஒன்றை படித்தேன். அதை இந்த நேரத்தில் உங்களிடம் பகிர விரும்புகிறேன். பொதுவாக, நாம் அனைவரும் தூரத்தை மீட்டர், கிலோ மீட்டர், மைல்ஸ் என்று அழைப்போம். ஆனால், இசை ஞானியின் ரசிகர்கள் மட்டும்தான் சென்னை டூ விழுப்புரம் எவ்வளவு தூரம் என்றால், 25 இளையராஜா அய்யா அவர்களின் பாடல்கள் என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு எல்லோரின் வாழ்க்கைப் பயணத்திலும் வழித்துணையாக இருப்பவர் அய்யா இசைஞானி அவர்கள்.

கோடிக்கணக்கான தமிழர்களைப் போல நானும் இசைஞானியின் இசையோடு சேர்ந்துதான் வளர்ந்தேன். பயணங்கள், தனிமை, குடும்ப நேரம், உடற்பயிற்சி நேரங்களில் என் ப்ளே லிஸ்டில் எப்போதுமே இளைய ராஜாவின் பாடல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கும். இசை, இசைஞானி இளையராஜா என்ற டைட்டில் கார்டின் மூலமே பல வெற்றிப் படங்களை தமிழ்நாட்டிற்கு தந்த பெருமை நம் இசைஞானிக்கு மட்டுமே உண்டு.

அய்யா இளையராஜா அவர்கள், முதன்முதலில் இசையமைத்த படம் அன்னக்கிளி. வருடம் 1976. அப்போது நான் பிறக்கக்கூட இல்லை. அன்று தொடங்கிய அவரின் இசைப் பயணம், இன்றைக்கு பலப் பரிமாணங்களில் வெளிப்பட்டுக்கொண்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக, மிகக்கடினமான இசை வடிவம் என்றுச் சொல்லக்கூடிய சிம்பொனி இசையை லண்டனில் அரங்கேற்றி, தன் 82வது வயதிலும் இசைஞானி அவர்கள் புதுப்புது சாதனைகளை தினமும் படைத்துக்கொண்டு இருக்கிறார்.

### தமிழ்நாட்டுக்கும் பெருமை!

எப்படி ஒருவர் சுறுசுறுப்பாக, ஒழுக்கமாக, அதே நேரத்தில் படைப்பாளியாக இருக்க வேண்டும் என்பதற்கு நம் அனைவருக்கும் முன்னுதாரணமாக இருக்க்கூடிய வர்தான் இசைஞானி அவர்கள். லண்டனில் அரங்கேற்றப்பட்ட இசைஞானி அவர்களின் சிம்பொனியை நேரில் கேட்டு ரசிக்க முடியவில்லை என்று, உங்களில் பலபேருக்கு அந்த வருத்தம் இருந்திருக்கும். அந்த வருத்தம், இன்றைக்கு வரைக்கும் எனக்கும் இருந்தது. அந்த ஏக்கத்தை நம் முதலமைச்சர் அவர்கள் நம் அரசு இன்றைக்கு நம் அனைவருக்கும் செய்து காட்டியிருக்கிறது. அதுவும் மிகப்பெரிய பாராட்டு விழாவோடு, இந்த சிம்பொனி இசையின் அரங்கேற்றமும் நடந்திருக்கிறது. இது இசைஞானி அவருக்கும் மட்டும் பெருமையல்ல. ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கும், ஒவ்வொரு தமிழனுக்கும் இது பெருமை.

### வரவேற்கிறேன்!

இந்த பெருமைக்குரிய விழாவிற்கு தலைமையேற்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன். இன்றைய விழாவின் நாயகர் நாடாளுமன்ற உறுப்பினர் இசைஞானி இளையராஜா அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன். மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் உலக நாயகன் கமல் சார் அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன். சிறப்புக்குரிய விழாவுக்கு வருகை தந்துள்ள நம் சூப்பர் ஸ்டார் ரஜினி சார் அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர்களை வருக, வருக என வரவேற்கிறேன். நன்றியுரை ஆற்றவுள்ள மாண்புமிகு அமைச்சர் அண்ணன் மு.பெ.சாமிநாதன் அவர்களையும், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களையும், தோழமைக் கட்சிகளின் அனைத்து தலைவர்களையும், அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும், மாண்புமிகு மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும், இளைய ராஜா அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அத்தனை பேரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ்., முதலமைச்சர் அவர்களின் செயலர் சண்முகம் ஐ.ஏ.எஸ்., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் ராஜாராமன் ஐ.ஏ.எஸ்., செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வைத்தியநாதன் ஐ.ஏ.எஸ்., உள்ளிட்ட அனைத்து அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று மகிழ்கிறேன்.

திரையுலகம் மற்றும் இசையுலகத்தை சேர்ந்த அனைத்து நண்பர்களையும், ஆளுமைகளையும் வருக, வருக என வரவேற்கிறேன். உலகம் முழுவதும் இருந்து வருகை தந்துள்ள இசைஞானியின் ரசிகர்களில் ஒருவனாக உங்கள் ஒவ்வொருவரையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

பத்திரிகை நண்பர்கள், இங்கு வந்துள்ள அனைத்து ரசிகர் பெருமக்களையும் வருக, வருக என வரவேற்று, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்றுப் பேசினார்.

---

## 2026 வரக்கூடிய தேர்தலில் எதிர்கட்சிக்கு

# தமிழ்நாடு மக்கள் சரியான பாடத்தை புகட்டுவார்கள்!

### சங்கரன் கோவில் – வாசுதேவநல்லூர் தொகுதி பாக முகவர்கள் கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தென்காசி, செப். 15 –

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் மற்றும் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிகளின் பாக முகவர்கள் (BLA2) கூட்டம் சீதாலட்சுமி மகாலில் மாவட்ட அவை தலைவர் கோ.சுப்பையா தலைமையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், சங்கரன்கோவில் தொகுதி பார்வையாளர் ராமஜெயம்,தலைமை செயற்குழ உறுப்பினர் தங்கவேலு, சீனிவாசன்,பரமகுரு,மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பகவிநாயகம் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி மாவட்ட பொருளாளர் சரவணன் துணைச் செயலாளர்கள் மனோகரன்,ராஜதுரை,புனிதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே. கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பேசியதாவது.

நான் மீண்டும் மீண்டும் சொல்லக் கூடிய ஒரே கருத்து என்னவென்றால் ஒன்றிய பா.ஜ.க அரசு தற்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியா? இல்லை தேர்தல் ஆணையம் தேர்ந்தெடுத்து அங்கே அமர வைத்த ஆட்சியா? என்ற சந்தேகம் மக்களிடம் எழுந்துள்ள சூழ்நிலையில் தான் நாடு இருக்கிறது.

நினைப்பார்கள்.மக்களுக்கு மறந்தால் பரவாயில்லை அவங்க கட்சிகாரங்களே மறந்துவிட்டார்கள்.

இப்போது புதுசா ஒருத்தர் வந்திருக்கிறார்.இவர் எங்க தலைவர் என்னனு சொல்ல ஆரம்பிச்சிட்டாங்க.அதனால பல குழப்பங்கள்.இதுல திடீர்னு வேற சில பேர் வந்து எப்படி பேச கூடாதோ, எப்படி ஒரு முதலமைச்சர் மதிக்க கூடாதோ மூத்தவர்களை எப்படி பேசக்கூடாதோ அதுதான் தன்னுடைய பாணி என்று நிரூபித்துக் கொண்டிருக்கக் கூடிய சில பேருக்கு வரக்கூடிய தேர்தலிலே தமிழ்நாட்டு மக்கள் சரியான பாடத்தை சொல்லித் தருவார்கள்.அதனால் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். மக்கள் தன்னுடைய எதிர்காலத்துக்கு தன்னுடைய பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு எந்த ஆட்சி ஒரு நல்ல ஆட்சியை வழங்கும் என்பதை புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்த தேர்தலில் உங்களுடைய பொறுப்பு தான் மிக முக்கியமான பொறுப்பு என்பதே நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.ஏனென்றால் பல தேர்தல்கள் தேர்தல் கமிஷன வச்சே வெற்றி பெற்று இருக்கக் கூடிய தேர்தல்கள் என்பதை வரக்கூடிய பல தரவுகள் பல புள்ளிவிபரங்கள் வருகிறது.ஒவ்வொரு பகுதிகளிலும், பல இடங்களிலே திடீர்னு 40 ஆயிரம் ஓட்டு எல்லாம் காணாமல் போய்விடுகிறது.

இப்படி ஒவ்வொரு பூத்களையும் குழப்பங்களை உருவாக்கி பெயர்களை நீக்கி தனக்கு வேண்டக்கூடியவர்களின் பெயர்களை சேர்த்து தேர்தல் வெற்றிகளை மாற்றிக் கொண்டிருக்கக் கூடிய சூழல் நாடு முழுவதும் இருக்கிறது. எல்லோருக்கும் அச்சம் இருக்க கூடிய சூழ்நிலையிலே இந்த தேர்தல் பொறுப்பிலே மிக முக்கியமான பொறுப்பு பாக முகவர்களாக இருக்கக்கூடிய உங்களுக்கு தான் இருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்.



எல்லா தேர்தலிலும் வாக்காளர்களை பட்டியலை சரி பார்க்க வேண்டும்.தேர்தல் வெற்றிக்கு இதுதான் அடிப்படை என்ற நிலை.

ஆனால் வரக்கூடிய தேர்தல் நம்முடைய பரம்பரை எதிரிகளும் பாரம்பரிய எதிரிகளும் இணைந்து நமக்கு எதிராக வரக்கூடிய தேர்தல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.எதிரான அத்தனை சூழ்ச்சிகளையும் கையிலே எடுப்பார்கள்.அதனால வாக்காளர் பட்டியலை நீங்கள் சரிபார்க்க வேண்டும்.இத்தனை நாளா பார்த்த மாதிரி இல்லை. இன்னும் அதிக கவனத்தோடு வயது முதிர்ந்தவர்கள் மாற்றுத்திறனாளிகள் சில நேரங்களில் நம்ம தெருவுல இருக்கக்கூடிய உங்களுக்கு திருமணம் ஆகி இருக்கலாம், வேறு ஊர்ல வேலை கிடைச்சிருக்கலாம், இல்லனா வேற காரணங்களுக்காக வெளியூரிலே சென்று அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தை மாற்றிக் கொண்டிருக்கலாம், இதையெல்லாம் கவனமாக கணக்கில் எடுக்க வேண்டும்.நம்ம ஊர்ல இல்லாதவங்க யாராவது அந்த பட்டியலிலே இணைக்கப்பட்டிருக்கிறார்களா.அவங்க வேற எங்கேயாவது ஓட்டு ஐடி வச்சிருக்காங்களா. இதை எல்லாம் நீங்கள் கவனத்தோடு பார்க்க வேண்டும். சென்ற பட்டியலில் யார் யார் பெயர் எல்லாம் இருந்தது.இந்த பட்டியல்ல அவங்க பேர் இருக்கா. நீக்கப் பட்டிருக்கா. நீக்கப்பட்டிருந்தால் அதற்கான காரணம் என்ன என்பதை நீங்கள் சரிபார்க்க வேண்டும். போன தேர்தல்ல சில பேருக்கு வாக்குரிமை இருந்ததற்காக இந்த தேர்தலில் அவர்களுக்கு அந்த பட்டியல்ல பேர் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதையும் நாம் அக்கறையோடு பார்க்க வேண்டும்.

மிக முக்கியமாக் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சார்பாக இருக்கக்கூடிய பூத்களில் இருக்கக்கூடியவர்கள் இன்னும் கவனமாகப் பாக்க வேண்டும்.அங்குதான் அதிகமான பேர்கள விட்டுருவாங்க இல்லையா. அதனால நீங்க கவனமாக பார்க்க வேண்டும். தேர்தல் கமிஷன் பூத்தோட எண்ணிக்கையையும்,இந்த தேர்தலில் அதிகரிக்க இருக்கிறார்கள். சங்கரன்கோவில் தொகுதியில் 287 பூத்துக்கு இன்னும் 28 சேர்க்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதேபோல வாசுதேவநல்லூர் தொகுதியில் 275 பூத்திற்கு இன்னும் 35 சேர்க்கப்படும் வாய்ப்பு இருக்கிறது.அதனால் அதுக்கும் நம்ம தயாராக இருக்க வேண்டும்.இங்கே இருக்கக்கூடிய மாவட்ட கழக செயலாளர் அந்த அதிகமாக சேர்க்கப்பட இருக்கக்கூடிய 28,35 பூத்துக்கும் இப்போதே ஆள்களை போடவேண்டும். கடைசி நிமிஷத்துல தேடாமல் இப்பவே நீங்க அந்த பாக முகவர்களை தேர்வு செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல பாகம் முகவர்களும் தங்களுடைய கடமை என்ன என்பதை தெரிந்து கொண்டு, முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நாளும் மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்,மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று உழைத்துக் கொண்டிருக்கிறார்.அதே நேரத்துல நமக்கு இருக்கக்கூடிய ஒவ்வொரு ஊரிலும் இருக்கக்கூடிய அடிப்படை தேவைகள் அது நிறைவேற்றப் படாமல் விடுபட்டு விடக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு ஊரிலும் அமைத்து அந்த முகாம்களின் வழியாக மக்கள் இருக்கக்கூடிய கோரிக்கைகள் பிரச்சனைகளை நிறைவேற்ற வேண்டும்.

மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய ஆட்சி நம்முடைய ஆட்சி என்ற பெருமை நமக்கு எல்லாம் உண்டு.ஆனால் அதே நேரத்தில் இந்த பெருமைகளை எல்லாம் நிலை நிறுத்த வேண்டும். நம்முடைய ஆட்சி தொடர வேண்டும்.இந்த திராவிடம் ஆடல் ஆட்சி அடுத்த தலைமுறைக்கு பயனுள்ள ஒரு ஆட்சியாக இன்று நாம் தொடங்கி இருக்கக்கூடிய திட்டங்களை எல்லாம் தொடரக் கூடிய ஆட்சியாக, மறுமுறையும் நம்முடைய ஆட்சிப் பொறுப்பை நாம் முதலமைச்சரான தளபதியார் அவர்களின் கைகளில் ஒப்படைக்க வேண்டும் என்ற அந்த எண்ணத்தோடு நாம் அத்தனை பேரும் பாடுபட வேண்டும். உழைக்க வேண்டும். வரக்கூடிய 15ஆம் தேதி நம்முடைய பேறறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் ஒரு உறுதிமொழியை ஒவ்வொரு பாகத்திலும் எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறார்கள்.அதன் படி நீங்கள் பாக முகவர்கள் அங்கு இருக்கக் கூடிய கழகத்தின் செயல் வீரர்களோடு, பொறுப்பிலே இருக்கக்கூடியவர்களோடு இணைந்து அந்த பகுதியிலே நீங்கள் நம் கட்சியிலே தங்களை இணைத்துக் கொண்டிருக்க கூடிய ஓரணியில் தமிழ் நாடு என்ற அந்த முன்னெடுப்பின் வழியாக தன்னை இணைத்து கொண்டிருக்கக் கூடிய குடும்பங்களோடு இணைந்து நீங்கள் அந்த உறுதி மொழியை எடுக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.உங்களை எல்லாம் சந்தித்ததிலேயே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் உரையாற்றினார்.

---

# கரூரில் கழக முப்பெரும் விழாப் பணிகள்!

### அமைச்சர் சு.முத்துசாமி – செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. ஆய்வு!

கரூர், செப். 15 –

கரூரில் செப்டம்பர் 17–ஆம் தேதி நடைபெறும் கழக முப்பெரும் விழா மைதானத்தில் நடைபெற்று வரும் பணிகளை அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜியுடன் இணைந்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கரூர் கோடங்கிப்பட்டியில் கழக முப்பெரும் விழா செப்டம்பர் 17–ஆம் தேதி பிரம்மாண்ட அளவில் நடைபெற இருக்கிறது. வீட்டு வசதி துறை அமைச்சர் சு.முத்துசாமி, கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், சட்டமன்ற உறுப்பினர்கள் நிர்வாகிகள் மைதானத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் அமைச்சர் சு.முத்துசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

செப்டம்பர் 17–ஆம் தேதி கரூரில் நடைபெறும் முப்பெரும் விழா மைதானத்திற்கு எங்களுடைய நிர்வாகிகள் அனைவரும் இங்கே வந்திருக்கிறார்கள். இதற்கு இரண்டு நோக்கம்.

வரும் 17–ஆம் தேதி நடைபெற இருக்கின்ற முப்பெரும் விழாவிற்கு வருகின்ற பொழுது கேள்விப்பட்ட அளவில் பெரிய அளவில் கூட்டம் இருக்கும். எப்படி எங்கள் தோழர்களை அழைத்து வந்து சேர்ப்பது என்பதை முன்கூட்டியே வந்து பார்த்துக் கொள்வது.

இரண்டாவது அடுத்த கூட்டம் நாங்கள் நடத்தும் பொழுது என்னென்னவெல்லாம் செய்ய வேண்டும். இங்கு என்னவெல்லாம் செய்து இருக்கி றார்கள் என்பது இரண்டாவது நோக்கமாக வந்திருக்கிறோம். இரண்டு மூன்று நாட்களாக நாங்கள் கேள்விப்பட்டு கொண்டிருப்பது என்னவென்றால் ஏறத்தாழ 3 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இங்கே வர இருக்கிறார்கள். அந்த அளவுக்கு கூட்டம் வர இருக்கிறது என்பது எங்களுக்கு வருகிற செய்தியாக இருக்கிறது.

முதலிலேயே மூன்று லட்சம் என்கிற பொழுது இன்னும் அதிகமாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதே போல முதலில் ஒரு லட்சம் இருக்கைகள் போட ஏற்பாடு செய்திருப்பதாக செந்தில் பாலாஜி அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது இருக்கிற நிலைமையை பார்த்தால் எண்ணிக்கை அதிகமாகும். இருந்தாலும் இட வசதி பெரிய அளவில் இருக்கிறது. மிகப்பெரிய கூட்டம் வரும். இதுபோல முப்பெரும் விழா பெரிய அளவில் நடைபெறுவது அநேகமாக கரூரில் நடைபெறுவது தான் மிகப்பெரும் முப்பெரும் விழாவாக அமையும்.

முதலில் திட்டமிட் டதை விட இன்னும் பெரிய அளவில் கூட்டம் வரும். எங்களுக்கு என்ன பயம் என்றால் கரூர் மாவட்டத்தில் இருப்பவர்களே முதலில் வந்து விடுவார்களே?. நாங்கள் எப்படி வருவது என கேட்டோம். பெரிய அளவில் கார் பார்க்கிங், நுழைவாயில் எல்லாம் முன்னேற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது. அவர்களோடு இணைந்து எங்களது நிர்வாகி களும் பணியாற்றுவார்கள். மேடையே ஏறத்தாழ 200 அடிக்கு 60 அடி அளவில் போடப்படுகிறது.

சில கட்சிகளின் கூட்டமே இந்த அளவிற்கு தான் இருக்கும். அந்த அளவுக்கு மேடையே மிகப்பெரிய அளவில் இருக்கிறது. கழக தலைவர் தளபதி அவர்களும் சரி, துணை முதலமைச்சர் அவர்களும் சரி கரூரில் நடத்த வேண்டும் என தேர்வு செய்தது செந்தில் பாலாஜி அவர்கள் சிறப்பாக ஏற்பாடுகள் செய்வார் என்பது தான். எங்களுக்கெல்லாம் கூட பொறாமையாக இருந்தது.

ஆனால் மிக அருமையாக இங்கே ஏற்பாடுகளை செய்து இருக்கிறார்கள். அவசியம் பெரிய திருப்புமுனையாக முப்பெரும் விழா அமையும். ஏற்கனவே பெரும் வெற்றியை நோக்கி கழகம் சென்று கொண்டிருக்கிறது. இது மேலும் வலு சேர்க்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.